**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 116 | of | 2008 |

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாளான இன்று**

| | |
|---|---|
| **வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** | **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.** |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **வித்யா** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-10.03.2026**

**வா.சா.-1**

**குறுக்கு விசாரணை-**

1 ம் பிரதிவாதி என் அம்மா. 2 ம் பிரதிவாதி என் அண்ணி. என் அண்ணன் எத்திராஜ் 1994 ல் இறந்துவிட்டார். சித்ரா, இந்திரா, விஜயா, சத்யா, சுஜாதா என் சகோதரிகள். சுந்தர்ராஜன் என் சகோதரன். சௌந்தராஜன் என் சகோதரர் அவர் வழக்கு நிலுவையில் இருக்கும் போது இறந்து விட்டார். 125 அயிட்ட சொத்துக்களுக்கு இந்த தாவா போடப்பட்டுள்ளது. செங்குன்றத்தில் உள்ள சொத்து தவிர மற்ற சொத்துக்கள் அனைத்தும் கூட்டு குடும்பத்திற்கு சொந்தமாக அப்படியே உள்ளன. அனைத்து

சொத்துக்களுக்கான உரிமை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் என் தகப்பனார் பெயரில் இருந்த அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்திருக்கிறேன். என் தகப்பனார் பெயரில் உள்ள வா.சா.ஆ.1 முதல் 11 குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வா.சா.ஆ.1 முதல் 11 தாவா 125 சொத்துக்கள் முழுவதற்கும் ஆனவை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ல் சர்வே எண்.45/6, வா.சா.ஆ 9 ல் சர்வே எண்.45/6 தாவா சொத்து விவரத்தில் சேர்க்கப்படவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. என் தகப்பனார் உயிருடன் இருந்த போது அவர் பெயரில் இருந்த சொத்துக்களை வெளி நபர்களுக்கு கிரயம் செய்துள்ளாரா என்று தெரியவில்லை. என் தகப்பனார் கிரயம் செய்துள்ள சொத்துக்கள் எல்லாம் இந்த வழக்கில் காட்டப்பட்டுள்ளன என்றும் அதனால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா அயிட்ட எண்.3 என் தகப்பனார் உயிருடன் இருக்கும் போதே MMDA ஆர்ஜிதம் செய்துவிட்டது என்றால் இருக்கலாம். அயிட்ட ம் எண் 5 முதல் 30, 37 முதல் 45 ஆகியவையும் என் தகப்பனார் உயிருடன் இருக்கும் போதே MMDA ஆர்ஜிதம் செய்துவிட்டது என்றால் இருக்கலாம். அந்த சொத்துக்களை இந்த வழக்கில் காட்டியுள்ளதால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா அயிட்டம் எண்.8,9,11 முதல் 35, 46 முதல் 72, 74, 75, 82 முதல் 99, 101 முதல் 123 சொத்துக்கள் என் தகப்பனார் உயிருடன் இருக்கும் போதே வேறு நபர்களுக்கு கிரயம் செய்துவிட்டார் என்றால் அதுபற்றி தெரியாது. தாவா அயிட்டம் எண் 76 முதல் 81 மற்றும் 84 சொத்துக்கள் GST road விரிவாக்கத்திற்காக அரசாங்கத்தினால் ஆர்ஜிதம்

செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி தெரியாது. அயிட்டம் எண்.91 முதல் 99 சொத்துக்கள் என் தகப்பனார் பெயரில் இல்லை என்றும் கம்பெனி பெயரில் இருந்தன என்றும் சொன்னால் அதுபற்றி தெரியாது. இந்த சொத்துக்கள் என் தகப்பனார் பெயரில்தான் உள்ளன என்பதை காட்ட ஆவண்ஙகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யவில்லை. இவை கம்பெனி பெயரில்இருந்ததால்தான் என் தகப்பனார் பெயர் உள்ள உரிமை ஆவணங்கள் தாக்கல் செய்யபடவில்லை என்றால் அதுபற்றி தெரியவில்லை. அயிட்டம் எண்-124 சொத்திற்கு 6 ம்பிரதிவாதி பெயரில் கிரய பத்திரம் உள்ளது என்றால் சரிதான். அந்த அயிட்டம் எண்- 124 சொத்தை என் அண்ணன் சௌந்தராஜன் திண்டிவனத்தை சேர்ந்த கௌரி என்பவருக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான். அந்த சொத்து சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் கௌரிக்கு எதிராக அ.வ.137/2016 நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கை பின்னிட்டு வாபஸ் பெற்றுவிட்டேன். எனவே அந்த சொத்தில் நான் பாகம் கோர முடியாது என்றால் சரிதான். அயிட்டம் எண் 100 சொத்து ஸ்ரீ சண்முகானந்தா பஸ் சர்வீஸ் பிரைவேட் லிமிட்டட் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அயிட்டஎண் 100 சொத்து என் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்து இல்லை என்றால் என் அப்பாவும் தாத்தாவும் சேர்ந்து வாங்கியதாகும். என் தாத்தா பெயர் சின்னய்யா நாயுடு. சின்னய்யா நாயுடுவிற்கு 7 பேர் வாரிசுகள். அந்த 7 பேரில் என் தகப்பனாரும் ஒரு வாரிசு . மீதமுள்ள 6

பேர் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. ஸ்ரீ சண்முகானந்தா பஸ் சர்வீஸ் பிரைவேட் லிமிட்டட் கம்பெனி sharehold கம்பெனி என்றால் சரிதான். sharehold கம்பெனியில் பாகம் கோரமுடியாது என்றும் Companies Act படி share மட்டுமே கேட்க முடியும் என்றால் அதுபற்றி என் வழக்கறிஞருக்குதான் தெரியும். எனவே அயிட்டம் எண் 100 ல் நான் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu